மேலும், அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் அனைத்திலும் மக்களின் அன்றாட தேவையான 300 வகையான பொருட்கள், அதிகபட்ச சில்லறை விலையிலிருந்து 5 சதவிகிதத்துக்கு குறைவான விலையில் விற்பனை செய்யப்படுவதால் மக்களின் வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்தகைய சீரிய திட்டத்தினை மேலும் விரிவுபடுத்திட 582 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் 5.82 கோடி ரூபாய் செலவில் புதிதாகத் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. விவசாயிகளின் தேவையைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் செயல்பட்டுவரும் 128 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 10 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 122 கிடங்குகளும், 500 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 18 கிடங்குகளும், 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 7 கிடங்குகளும், 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 2 கிடங்குகளும் ஆக மொத்தம் 32,200 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 149 கிடங்குகள் நடப்பாண்டில் 39.37 கோடி ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) வன எல்லைகளை Differential Global Positioning System மூலம் வரையறை செய்தல், புலிகள் காப்பகங்களில் கலைநயமிக்க சிறு கூட்ட அரங்குகள் அமைத்தல், வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு தொகுப்பூதியத்தை உயர்த்துதல் உள்ளிட்ட வனத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம் மற்றும் இந்திய வன அளவை நிறுவனம் தெரிவித்துள்ளவாறு வன நிலங்களைப் புவியளவை வரைபடத்தில் பதிவு செய்ய (Geo–referencing) வலியுறுத்தியுள்ளது. எனவே, வனத் துறையின்கீழ் வரும் வனப் பகுதி முழுவதையும் வன எல்லைகளைத் துல்லியமாக புவியிடங்காட்டி Differential Global Positioning System மூலமாக வரையறை செய்வதற்கான திட்டப் பணிகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, 3 ஆண்டுகளில்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 5

செயல்படுத்தப்படும். 2019–2020 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 12–30

2. வன விரிவாக்க மையங்களிலிருந்து மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, உள்ளூர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. வன விரிவாக்க மையங்களை வலுப்படுத்தும் வகையில், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் ஒருங்கிணைந்த கருத்தரங்குகள் வாயிலாக, நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, சந்தைப்படுத்துவதற்கான வழிமுறைகளை விவசாய பெருமக்களிடம் கொண்டு செல்ல தேவையின் அடிப்படையில், நாற்றங்கால் உற்பத்தி செய்யும் கோயம்புத்தூர், நாமக்கல், கரூர், தஞ்சாவூர், காஞ்சிபுரம், தருமபுரி, விருதுநகர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் செயல்பாட்டிலுள்ள 8 வன விரிவாக்க மையங்கள் 2.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டு, வலுப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. புலிகள் காப்பகங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கு வன உயிரினங்களைப் பார்ப்பதற்கும், மலையேற்றம் செய்வதற்கும், வனத்தின் இயற்கையை ரசிப்பதற்கும் அரிய சந்தர்ப்பங்களை வழங்கி வருகிறது. வன உயிரினங்களைப் பற்றியும், வனத்தினுடைய பயன்பாடுகளைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக, களக்காடு–முண்டந்துறை, ஆனைமலை, சத்தியமங்கலம் ஆகிய புலிகள் காப்பகங்களில் கல்வி, ஒலி–ஒளித் தகவல், கருத்து விளக்கக்கூடத்துடன் 3 கலைநயமிக்க சிறு கூட்ட அரங்கங்கள் தலா 3 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. வனப் பகுதியிலுள்ள இச்சாலைகளை பராமரித்து மேம்படுத்த, வரும் ஆண்டுகளில் 200 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், நடப்பாண்டில் 577 கிலோ மீட்டர் நீளமுள்ள வனச் சாலைகளை மேம்படுத்திட 57.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. வன வளங்களைப் பாதுகாக்க தமிழ்நாடு வனத் துறையில் 1,119 வேட்டைத் தடுப்புக் காவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

2019 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இவர்கள் வனப் பகுதிக்குள் வாழ்வதால் பெரும்பாலும் மலைவாழ் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதோடு மட்டுமின்றி, அடர்ந்த வனப் பகுதியை நன்கு அறிந்துள்ளதன் காரணமாக, வனப் பகுதிகளில் வன மரங்கள் திருட்டு, வேட்டையாடுதல், நக்சல்பாரிகள் ஊடுருவதைத் தடுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதால் வன வளத்தையும், வன உயிரினங்களையும் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

இப்பணியாளர்கள் வனத்திற்குள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வன வளங்களைக் காக்கும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு, பணிபுரிந்து வருவதால், அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 10,000 ரூபாயிலிருந்து 12,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) சுற்றுச்சூழலை மேம்படுத்த காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரத்தில் உள்ள சிட்லபாக்கம் ஏரியில் சூழல் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் பற்றிய சுற்றுச்சூழல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை மாநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விதமாக, கடந்த ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவின்படி, சென்னை சேத்துப்பட்டு ஏரி, ஆவடி பருத்திப்பட்டு ஏரி மற்றும் மாதவரம், அம்பத்தூர், கொரட்டூர் ஏரிகள் மறுசீரமைக்கப்பட்டன. தற்போது அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கையினை ஏற்று, நடப்பாண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டத்திலுள்ள சிட்லபாக்கம் ஏரியில் சூழல் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

219 ஏக்கர் விவசாய நிலங்களை ஆயக்கட்டுப் பரப்பாகக் கொண்டது சிட்லபாக்கம் ஏரி. ஆனால், தற்போது அந்த ஏரி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சிட்லபாக்கம் ஏரியைச் சீரமைக்கும் பொருட்டு, ஆக்கிரமிப்பை அகற்றுதல், மண்திட்டுகளால் குறைந்துள்ள நீரின் கொள்ளளவினை அதன் உச்ச கொள்ளளவிற்கு மீளச் செய்தல், ஏரிக்கரையினைப் பலப்படுத்துதல், உபரிநீர் வீணாவதைத் தவிர்த்தல், உபரிநீர் தடுப்புச் சுவர் வசதிகளை மீண்டும் ஏற்படுத்துதல், வெள்ளநீரை வடிகால்கள் மூலமாக